செ. கு. எண்: 106 நாள்: 04.07.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 4.7.2018

**தூத்துக்குடி மாவட்டம்,** கடைமடை பகுதியில் அமைந்துள்ள திருவைகுண்டம் மற்றும் மருதூர் அணைக்கட்டுகளின் மூலம் பாசனம் பயன்பெறும் கால்வாய் பகுதிகளில் உள்ள பயிர்களை காக்கவும், மக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைகளுக்காகவும் பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தினைப் பொறுத்து தண்ணீர் திறந்துவிட விவசாய பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாய பெருமக்களின் கோரிக்கையை ஏற்று, தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் மற்றும் மருதூர் அணைக்கட்டுகளின் கீழ் உள்ள மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், வடக்கு பிரதான கால்வாய் மற்றும் தெற்கு பிரதான கால்வாய் பகுதிகளில் உள்ள பயிர்களை காக்கவும், மக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைகளுக்காகவும் சிறப்பு நிகழ்வாக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தினைப் பொறுத்து **6.7.2018 முதல் 4.8.2018** வரையிலான காலத்திற்கு **2000 மில்லியன்** கனஅடி தண்ணீரை திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

குடிநீர் தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பொதுமக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**